போலீஸ் மரியாதையுடன் 30 குண்டுகள் முழங்க

# பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் உடல் சொந்த ஊரில் அடக்கம்!

## அமைச்சர் பெரிய கருப்பன் அஞ்சலி!

இராமநாதபுரம், ஜூலை 10

90 வயதான மூத்த தமிழ் அறிஞர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள் சென்னையில் மரணம் அடைந்தார். இவர், ராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் அருகே ஆண்டநாயகபுரத்தில் 1935-ஆம் ஆண்டு பிறந்தவர். நெஞ்சத்தோட்டம், அய்யப்பன் பாமாலை, தமிழ் முழக்கம், தாய் மண், சேது காப்பியம் உள்பட ஏராளமான நூல்களை எழுதியுள்ள வா.மு. சேதுராமன் திருவள்ளுவர் விருது, கலைமாமணி விருது, சி.பா.ஆதித்தனார்



முத்த தமிழறிஞர் விருது உள்பட பல்வேறு விருதுகளை பெற்றுள்ளார்.

சென்னையில் அவரது உடலுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்பட தலைவர்கள், தமிழ் அறிஞர்கள் அஞ்சலி செலுத்தினர்.

அவரது உடலை சொந்த ஊரில் அடக்கம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி ஆண்டநாயகபுரம் கிராமத்துக்கு கொண்டு வரப்பட்ட அவரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அரசு சார்பில் தமிழக கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், முதுகுளத்தூர் கோட்டாட்சியர் சண்முகம் உள்ளிட்ட அதிகாரிகள் இறுதி அஞ்சலி செலுத்தினார்கள். ஆண்டநாயகபுரம், அபிராமம் மற்றும் சுற்று வட்டார கிராமங்களைச் சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

வா.மு.சேதுராமனின் மகன்கள் திருவள்ளுவர், கவியரசன், ஆண்டவர், தமிழ் மணிகண்டன் இறுதிச் சடங்குகளை செய்தனர். துப்பாக்கி ஏந்திய போலீசாரின் மரியாதையுடன், 30 குண்டுகள் முழங்க உடல் அடக்கம் நடந்தது.

# சமூகத்தை சமநிலைப்படுத்துகிறது திராவிட முன்னேற்றக் கழகம்!

## கலைஞர் நூலக வாசகர் சந்திப்பில் - இளம் பேச்சாளர் விக்னேஷ் உதயன் பேச்சு!

சென்னை, ஜூலை 10 -

கழக இளைஞர் அணி சார்பில் ஆயிரம்விளக்கு தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தில், கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், கலைஞர் நூலக மாணவர் வாசகர் சந்திப்பு, வட்ட வாரியாக நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக 111 வது வட்டத்திற்கான மாணவர் வாசகர் சந்திப்பு, 7.7.2025 அன்று நடைபெற்றது.





கழக இளம் பேச்சாளர் வழக்கறிஞர் விக்னேஷ் உதயன் இந்நிகழ்வில் கலந்து கொண்டு, வாசிப்பின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். மேலும், "நோயால் பாதிக்கப்பட்டவருக்கு மருத்துவர் எப்படி ஆண்டிபயாட்டிக் கொடுத்து நோயை தீர்ப்பாரோ, அவ்வாறே திராவிட முன்னேற்றக் கழகம், சமூக நீதி என்ற ஆண்டிபயாட்டிக்கை பயன்படுத்தி இச்சமூகத்தின் பிரச்சனைகளை விரட்டுகிறது. தமிழ்ச் சமூகத்திற்கு ஆரியம் எத்தனை இடையூறுகளை கொடுத்தாலும், அதை ஒழித்து சமூகத்தை சமநிலைப்படுத்துகிறது நம் தி.மு.க." என்று மாணவரிடையே பேசினார்.

சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ப.பிரகாஷ், துணை அமைப்பாளர் என்.மோகன்வேல், ஜே.எம்.எச்.இம்ரான், பகுதி அமைப்பாளர் புவனேஷ் ஸ்ரீ வட்சன், பகுதி துணை அமைப்பாளர் பா.சந்திர போஸ் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

ஓரணியில் தமிழ்நாடு சீர்மிகு சென்னை 2.0 என்ற வாசகத்துடன் நான்காண்டு சாதனை விளக்க வாகன பிரச்சார நிகழ்ச்சி நடைபெற்ற போது 07.07.25. 123 வது வட்டக் கழகத்திற்கு உட்பட்ட வட்ட நிர்வாகிகள் அனைவரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். சிறப்பு அழைப்பாளராக. பகுதி செயலாளரும் 121வது நாமற்ற உறுப்பினரும் நந்தனம் மதி எம் சி பகுதி அவைத் தலைவர் ஜி.ஆர்.ராஜேந்திரன் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் விஜய வெங்கடேஷ் உடன் பி.எஸ். ஆறுமுகம் கலந்துகொண்டு பெரியார் சாலையில் உள்ள தெருக்களில் பிரச்சாரம் மேற்கொண்ட போது நமது வட்டக் கழகத்தில் உள்ளிட்ட மாநில மாவட்ட பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.






# தி.மு.க. இளைஞர் அணி

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

**ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!**

கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு மற்றும் திருநெல்வேலி மத்திய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 12.07.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | கன்னியாகுமரி கிழக்கு | மாவட்டக் கழக அலுவலகம், ஒழுகினசேரி, நாகர்கோவில். |
| | மாலை 3.00 மணி | கன்னியாகுமரி மேற்கு | எம்.கே.ஆடிட்டோரியம், வேர்க்கிளம்பி. |
| 19.07.2025 சனிக்கிழமை | மாலை 6.00 மணி | திருநெல்வேலி மத்திய | ஹோட்டல் அப்னா பார்க், வண்ணாரப்பேட்டை. |

**சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!**

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்–9–இல் கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு, திருநெல்வேலி கிழக்கு மற்றும் திருநெல்வேலி மத்திய ஆகிய மாவட்டங்களில் உள்ள சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 13.07.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | நாகர்கோவில் | மாவட்டக் கழக அலுவலகம், ஒழுகினசேரி, நாகர்கோவில். |
| | மாலை 4.00 மணி | பத்மநாபபுரம் | எம்.கே.ஆடிட்டோரியம், வேர்க்கிளம்பி. |
| 19.07.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | ராதாபுரம் | எம்.எஸ்.மஹால், வள்ளியூர். |
| 20.07.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | பாளையங்கோட்டை | ஹோட்டல் அப்னா பார்க், வண்ணாரப்பேட்டை. |
| | மாலை 4.00 மணி | திருநெல்வேலி | ஏ.ஆர்.திருமண மண்டபம், சங்கரன்கோவில் சாலை, கானார்பட்டி, மானூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 09.07.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


நம் உரிமைகளை மீட்டெடுக்க, பண்பாட்டுப் படையெடுப்பை முறியடிக்க மீண்டும்

# 'திராவிட மாடல்' அரசே தேவை! அதற்காக உழைப்பீர்! உழைப்பீர்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை., ஜூலை 10 –

'திராவிட மாடல்' அரசின் சாதனைகள் மகத்தானவை. வரும் தேர்தலில், அதனை வீழ்த்த பல்வேறு சூழ்ச்சிகள், பண பலம், பத்திரிகைப் பலம் கொண்டு, பாசிச சக்திகள் முனையும் – அதற்கு இடந்தராமல், இனி ஓராண்டுக்கு தி.மு.க. ஆட்சியை மீண்டும் கொண்டு வர அயராது உழைக்கவேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர், தமிழர் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:

''வரப் போகும் தேர்தல்களில் உங்கள் சமூகத்தின் சுயமரியா தைக்குப் பாடுபடுபவருக்கு வெற்றித் தேடிக் கொடுங்கள்.

**தந்தை பெரியார் கூறிய அந்தத் 'தபசு!'**

பார்ப்பன வாலிபர்கள் தேர்தலில் எவ்வளவு வேலை செய்கிறார்கள் என்பதைப் பாருங்கள். பார்ப்பன ஆதிக்கத்திற்குப் பாடுபடுபவர்க்கு அவர்கள் தங்கள் தங்கள் படிப்பை விட்டுவிட்டுக்கூட, ஓட்டு வாங்கிக் கொடுக்கப் பாடுபடுகிறார்கள். ஆதலால், நீங்களும், அவர்களைப் போலவே வீதி வீதியாய், ஊர் ஊராய்த் திரிந்து, உங்கள் சுயமரியாதைக்கு வெற்றி அளியுங்கள்.

படுக்கையிலிருந்து எழும்போது, இன்று உங்கள் சுயமரியாதைக்கு என்ன செய்வது? என்று யோசியுங்கள்; ஒன்றும் செய்யாத நாளை, வீணாய்ப் போனதாகவும், உங்கள் வாழ்நாளில் ஒன்று குறைந்ததாகவும் நினையுங்கள்.

ஒவ்வொரு வாலிபரும் தங்கள் கடமையை உணருங்கள்.

உங்கள் சுயமரியாதைக்கு உங்கள் உயிரைக் கொடுக்கும் பாக்கியத்தை அடைய 'தபசு' இருங்கள்!!"

– இது தந்தை பெரியார் அவர்கள் திராவிடர் இயக்கம் (ஜஸ்டிஸ் கட்சி) கண்ட தலைவர்களில் முக்கிய மானவரான சர். பிட்டி தியாகராயர் நினைவுச் சின்னக் கூட்டத்தில் 1926, ஆகஸ்ட் மாதம் ஆற்றிய சொற்பொழிவின் இறுதிப் பகுதி ('குடிஅரசு', 12.9.1926.).

நம் பகுத்தறிவுப் பகலவன் (சுமார் நூறாண்டுகளுக்கு முன்பு) ஆற்றிய உரை இன்றும் தேவைப்படுகிறது, இல்லையா?

திராவிட இளைஞர்களே, மாணவப் பட்டாளங்களே,

நன்கு சிந்தித்துப் பாருங்கள்.

அன்று 'சத்தியமூர்த்திகள்' உருவகத்தில் பார்ப்பன அவாளுக்கு வால் பிடித்துக் கொத்தடிமைகளாக, மானமும், அறிவும் தேவைப்பட்ட திராவிட இனத்தின் விபீடணப் பட்டாளங்களும் தேர்தல் களத்தில் நின்றன!

இன்று காட்சிகள் மாறினாலும், புதிய கட்சிகள் வேடத்திலும், சமதர்மத்தை ஒழித்து, மனுதர்மத்தை நூற்றுக்கு நூறு உண்டாக்க, நவீன விபீடணப் பட்டாளங்களின் துணையுடன் தேர்தலில் பித்தலாட்டங்களையே பெரிதும் நம்பி, வாக்காளர்கள் ஆதரவு இல்லாவிட்டாலும், ''ஜெயிப்போம்" என்று வடபுலத்தில் காட்டும் வித்தை தமிழ்நாட்டில் செலாவணி ஆகவில்லை என்று தெரிந்ததால், தங்களிடம் உள்ள சில அரசியல் ஆயுதங்களைக் காட்டி, மடியில் கனமுள்ள கட்சிகளை மிரட்டி, தங்களது கூட்டணிக்கு வரவழைத்து, எதிர்க்கட்சியாகவும், ஆளுங்கட்சியாகவும் 34 ஆண்டுகள் இருந்த ஒரு கட்சியை அடமானப் பொருளாக்கி, தேர்தல் களம் காணத் திட்டமிடுகிறார்கள்.

**எதிரிகளின் சூழ்ச்சிகள்**

தன்னுடைய அரும்பெரும் சாதனைகள் என்ற பலத்தை நம்பியே, மகத்தான பேராதரவுடன் மக்கள் மத்தியில் தலைநிமிர்ந்து நிற்கிறது 'திராவிட மாடல்' ஆட்சி நடத்தும் தி.மு.க.!

மதவெறி, ஜாதி வெறி மூலதனத்தோடு மட்டுமல்லாமல், பதவி வெறி, பலவீனம் உடையவர்களை எல்லாம் பிளந்தும், பிரித்தும், நேரிடையாகவும், மறைமுகமாகவும் தன் சூழ்ச்சி வேலைகளை செய்து வருகிறது பி.ஜே.பி. இதனை முறியடித்து, நாசகார பாசிச சக்திகளுக்கான பீடல்ல தமிழ்நாடு என்பதை விளக்கிட, ஆயத்தமாவீர்!

**இது வெறும் தேர்தல் அல்ல!**

இது வெறும் அரசியல் தேர்தல் அல்ல; இனிவரும் நமது ஒடுக்கப்பட்ட சமூகங்களும், சிறுபான்மையர் என்று அழைக்கப்படும் நம் மக்களும் அவரவர் உரிமைகளைப் பெற, நமது ஒப்பற்ற முதலமைச்சர், சாதனைகளால் மகுடம் தறிக்கும் மாமனிதரின் நல்லாட்சி மீண்டும் தொடர வேண்டாமா?

மாநிலங்களையே இந்திய அரசியல் வரைபடத்தில் அழித்து, ஒற்றை ஆட்சியாக்கிட, ஓராயிரம் சூழ்ச்சிகளை – தம்மால் அனுப்பப்பட்ட ஆளுநர்கள், அரசியல் கூலிப் பட்டாளங்களைத் தம் வயப்படுத்தியும், சகல வித்தைகளையும் செய்து பார்க்கும் நிலைக்கு இறங்கிவிட்டனர்!

தமிழ்நாட்டு வாக்காளர்களின் வாக்குகளைப் பறிக்க முயற்சிக்கி ன்றனர். அவர்களது பலமோ கொஞ்ச நஞ்சமல்ல; குறைத்து மதிப்பிடக்கூடாது.

உண்மைகளை மறைத்தும், திரித்தும் திட்டமிட்டு களத்தில் இறங்கிடும் வேலை என்பது அவர்களுக்குப்பழக்கமானதே!

**நம் எதிரிகள் யார்? அவர்களின் ஆதரவாளர்கள் யார்?**

1. அவர்களிடம் பல பெருமுதலாளிகள், கார்ப்பரேட் முதலாளிகள், பண பலம் (Money Power),

2. கலவரம், காலித்தனம், கயமைச் செயல்களில் ஈடுபட்டு, தமிழ்நாடு அரசுக்குக் களம் ஏற்படுத்த ஆயத்தம் (Muscle Power)

3. பெருமுதலாளிகள், ஊடகச் சக்திகள் (Media Power)

4. திரிசூலத்தின் மூன்று முனைகளைப் (ஒரு முனை, அமலாக்கத் துறை, இரண்டாவது முனை வருமான வரித் துறை, மூன்றாவது முனை சி.பி.அய்) பயன்படுத்தி, எதிர்ப்பவர்களை மிரட்டிப் பணிய வைக்கும் ஊரறிந்த ஆயுதங்கள். (Ruling Power).

ஏற்கெனவே இம்மாதிரி பட்டாளங்களுடன் முந்தைய தேர்தல்களில் ஈடுபட்டு, கூட்டணி வைத்தபோதும், தமிழ் மண் – பெரியார் மண்ணான திராவிட பூமியானதால், முற்றிலும் அவற்றை நிராகரித்து, நாடாளுமன்றத் தேர்தலில் 40–க்கு 40 இடங்களில் வெற்றி பெற்றது இந்தியா கூட்டணி.

இனி, எவ்வளவு மூர்த்தண்ய மான தங்களது அரசியல் போர் – தேர்தலை நடத்தி, எதைச் செய்தாவது தி.மு.க. ஆட்சியை அகற்றிட ஆரிய ஆர்.எஸ்.எஸ். சக்தி, அவர்களது அடிமைகளாகிவிட்டவர்களும் அணி திரண்டு, அவர்களுக்கு இடப்பட்ட பணியைச் செய்ய ஆயத்தமாகிவிட்ட நிலை.

**99 ஆண்டுகளுக்குமுன் தந்தை பெரியார் கூறியது இன்றைக்கும் பொருந்தும்!**

தந்தை பெரியார் 99 ஆண்டுகளுக்கு முன் அதே திராவிடர் ஆட்சியை, இதே நோக்கத்தோடு அன்று ஆரியம் எதிர்த்தபோது கூறியது இன்றும் பொருந்தும்.

பார்ப்பன வாலிபர்களை ஆர்.எஸ்.எஸ். கூட்டம் என்று வைத்து, எதிர் சுயமரியாதை அணி, தி.மு.க. தலைமையிலான கூட்டணி என்பது எவ்வளவு சரியான பொருத்தம் பார்த்தீர்களா?

நம் உரிமைகளை மீட்டெடுக்க, மீண்டும் பண்பாட்டுப் படையெடுப்புக்கு – தமிழ்நாடு மண் ஒருபோதும் இடந்தரக்கூடாது என்ற பணியே இன்னும் ஓராண்டிற்கு நமது பணி என்று கருதி உழையுங்கள்!

ஒருங்கிணைவோம், ஒழுங்கிணைந்த தமிழ்நாடு என்பது முக்கியம்!

'இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே,

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்!'

என்ற புரட்சிக்கவிஞரின் கவிதை வரிகள்தான் நம் இலக்காகி, வெற்றிக் கனி பறிக்க உழையுங்கள்!

**'திராவிட மாடல்' ஆட்சி மீண்டும் தொடர நம் பணிகள் தொடரட்டும்!**

இவ்வாட்சி இன்றேல், வாழ்வுரிமை பறிக்கப்பட்ட தமிழர்கள் நிலை என்னவாகும்? என்ற நிலைப்பாட்டை மக்களுக்கு நன்கு விளக்குங்கள்!

நம் 'தபசு' இன்றைய ஆட்சியே நாளைய ஆட்சி என்ற உறுதியுடன் உழைப்பதும், மக்களை உணர வைப்பதும்தான்! திண்ணைப் பிரச்சாரம், மக்கள் சந்திப்பு, தெருப் பிரச்சாரங்கள் பட்டி தொட்டிகளிலும் சுழன்ற டிக்கும் சூறாவளியாய் பாயட்டும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகளின்

# பி.எட். மாணாக்கர் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பப் பதிவு ஜூலை 21 வரை நீட்டிப்பு!

## அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அறிவிப்பு!



சென்னை, ஜூலை 10

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகளின் பி.எட். மாணாக்கர் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பப் பதிவு 21.07.2025 வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது:

20.06.2025 அன்று சென்னை இராணி மேரி கல்லூரியில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகளின் 2025-26 ஆம் ஆண்டிற்கான பி.எட். மற்றும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுநிலைப் பாடப்பிரிவுகளின் மாணாக்கர்களின் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பப் பதிவும் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த கால அவகாசம் இன்றுடன் (09.07.2025) முடிவடைவதால் மாணாக்கர்கள் நலன் கருதி 21.07.2025 வரை நீட்டிக்கப்படும்.

அதன் விவரம் பின்வருமாறு:

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகளில் 2025-26ஆம் கல்வியாண்டிற்கான பி.எட். மாணாக்கர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் 20.06.2025 முதல் www.tngasa.in என்ற இணையதள முகவரியில் பதிவு செய்யப்பட்டு வருகிறது.

இன்றுடன் (09.07.2025) கால அவகாசம் முடிவடைவதால் மாணாக்கர்கள் நலன் கருதி விண்ணப்பிக்கும் தேதி 21.07.2025 வரை நீட்டிக்கப்படுகிறது. 31.07.2025 அன்று மாணாக்கர் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்படும். 04.08.2025 முதல் 09.08.2025க்குள் மாணாக்கர்கள் தங்கள் விருப்ப கல்லூரியைத் தேர்வு செய்யலாம். 13.08.2025 அன்று மாணாக்கர்களுக்கான இட ஒதுக்கீட்டு ஆணை வெளியிடப்படும்.

மாணாக்கர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆணையை தங்கள் உள்நுழைவு ID மூலம் www.iwiase.ac.in என்ற இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்து தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கல்லூரியில் சேர்ந்து கொள்ளலாம். ஆகஸ்டு 20 முதல் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பி.எட். முதலாம் ஆண்டு மாணாக்கர்களுக்கு வகுப்புகள் தொடங்கும்.

மாணாக்கர்கள் தாங்கள் விரும்பிய பாடப்பிரிவுகளை மேற்குறிப்பிட்டுள்ள இணையதளத்தில் விண்ணப்பித்து இவ்வாய்ப்பினை பயன்படுத்தி தங்கள் எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பா. அம்பிகா

**ஜூலை 10 (2017)**



கம்பம் நகரக் கழகச் செயலாளராக பணியாற்றி வந்த தனது கணவருடன் இணைந்து கழகப் பணியாற்றி வந்த இவர், கழக மகளிர் அணியில் தன்னை இணைத்துக் கொண்டு கடலூரில் நடைபெற்ற மகளிர் அணி மாநாட்டில், தமது பகுதியில் உள்ள 300க்கும் மேற்பட்ட மகளிர் அணியினரை பங்கேற்கச் செய்தவர்.

2006ஆம் ஆண்டு கம்பம் நகர்மன்றத் தலைவராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, கம்பம் நகர கூட்டுக் குடிநீர் திட்டம் கொண்டு வர முயற்சி மேற்கொண்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழக அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றதோடு, பெருந்திரளாக மகளிர் அணியினரை திரட்டி பங்கேற்கச் செய்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.